# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C – 34/2017**

**Deposition of Witness for Prosecution : P.W. 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாயன் | Caste | : | |
| Father/Husband Name | : | முத்து | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

**(All Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 21.03.2024**

**முதல் விசாரணை**

நான் ஏ. புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். 17.12.2011 அன்று நகைகள் திருடுபோனது அதன்பின்பு இரண்டு வருடங்கள் கழித்து உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்திற்கு வேறு வேலையாக நான் சென்றபோது, போலீசார் ஒரு நபரை விசாரித்து கொண்டிருந்தார்கள். அந்த நபர் எங்கள் ஊரில் ராமர் என்பவரது வீட்டில் நகைகள் திருடியது சம்பந்தமாக கூறிகொண்டிருநதார். போலீசார் என்னிடம் அதை சொல்லி, எனது முன்னிலையில் எதிரியை விசாரித்தார்கள். அவர் அப்போது உ. வாடிபட்டி, உத்தப்பநாயக்கனூர், சின்னகுறவடி, பாப்பாபட்டி ஆகிய இடங்களில் திருடியதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த நகைகள் எங்கே வைத்துள்ளீர்கள் என்று போலீசார் விசாரித்ததற்கு திருடிய நகைகளை திண்டுக்கல் ஸ்ரீதேவி நகை கடையில் வைத்து அவர்கள் கொடுக்கும் பணத்தை நான் பெற்றுகொள்வேன் என்று கூறினார். மேற்படி எதிரியை பார்த்தால் நான் அடையாளம் காட்டுவேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி (**அ.சா.ஆ. 2**) ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஏ. புதுப்பட்டியில் பால்பண்ணை தலைவராக உள்ளேன். அ.சா.1 எனது அண்ணன் முறை ஆவார். நான் ஊரில் முக்கியஸ்தர் என்பதால் அடிக்கடி காவல் நிலையம் சென்று வருவேன். காவல் நிலையத்தில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நபரை அதற்கு முன் நான் பார்த்ததில்லை. நான் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக அன்றைய தினம் காவல் நிலையம் சென்றேன். போலீசார் என்னை அழைத்ததால் நான் பக்கத்தில் நின்றேன். மேற்படி நபர் சொன்ன வாக்குமூலத்தை நிலைய எழுத்தர் கைப்பட எழுதினார். சுமார் அரை மணி நேரம் எழுதினார். அதில் நான் கையெழுத்து போட சொன்னதால் நான் போட்டேன். வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. நான் அன்றைய தினம் சொந்த வேலையாக காவல் நிலையம் செல்லவில்லை எனறும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் காவல் அதிகாரி எங்கள் ஊருக்கு வந்து என்னிடம் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1 எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C – 34/2017**

**Deposition of Witness for Prosecution : P.W. 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : நடராஜன் | Caste | : |
| Father/Husband Name | : பொம்மாயி தேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 21.03.2024**

**முதல் விசாரணை**

நான் ஏ. புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ராமர் மற்றும் அவரது மனைவி மாயக்காள் ஆகியோரை தெரியும். அவர்களும் நாங்களும் ஒரே தெருவில் குடியிருந்து வருகிறோம். சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ராமர் வீட்டில் நகைகள் காணாமல் போனது பற்றி கேள்விபட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.12.2011 அன்று அ.சா.1 ராமர் அதிகாலை 01.00 மணியளவில் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றபோது அவர்களது வீட்டு கதவை பூட்டாமல் சென்றுவிட்டதாகவும் அந்த சமயத்தில் யாரோ வீட்டிற்குள் நுழைநது அ.சா.1 வீட்டில் பீரோ லாக்கரில் வைத்திருந்த 23 1/2 பவுன் நகையும் 10,000/- ரொக்க பணமும் திருடி சென்றுவிட்டதாக கேள்விபட்டேன் என்று

போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Madurai**

**Case No. C.C – 34/2017**

**Deposition of Witness for Prosecution : P.W. 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : காசிமாயன் | Caste | : |
| Father/Husband Name | : ராமர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 21.03.2024**

**முதல் விசாரணை**

நான் ஏ. புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். மாயக்காள் எனது தாயார் ஆவார். காசிநாதன் எனது அண்ணன் ஆவார். விஜயராணி எனது அக்கா ஆவார். கடந்த 17.12.2011 அன்று நான் 11 ஆம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். அன்றைய தினம் இரவு எனது அப்பா தண்ணீர் பாய்ச்சுவதற்காக 12.30 மணிக்கு தோட்டத்திற்கு சென்றுவிட்டு அதிகாலை 03.00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டார். காலை 08.00 மணியளவில் நான் பள்ளிக்கு கிளம்பி கொண்டிருக்கும்போது, எனது அம்மா மாயக்காள் எங்களது வீட்டில் உள்ள பீரோ லாக்கர் உடைக்கப்பட்டிருக்கிறது என்று கத்தினார். நாங்கள் சென்று பார்த்தபோது, நாங்கள் பீரோவில் வைத்திருந்த 23 1/2 பவுன் தங்க நகைகளும் ரூபாய் 10,000/- ரொக்க பணமும் காணாமல் போயிருந்தது. எனவே எனது அப்பா காவல் நிலையம் சென்று சம்பவம் பற்றி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் கேள்விபட்டபோது பள்ளிக்கு வெளியே நின்றேன். அதன்பின்பு நான் பள்ளிக்கு செல்லவில்லை. மாலைதான் காவல் நிலையம் சென்றேன். அன்றைய தினம்

போலீசார் வீட்டில் வந்து புகைப்படும் எடுத்தார்கள். யார் திருடினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது.